DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 17/2019

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : பெருமாள் | Father's/Husband's Name : | பூவலிங்கம் |
| Village | : வருசநாடு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) கடந்த 05.07.2006 ம் தேதி எனது மகனுக்கு தாவா சொத்தை தானமாக எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி தானப்பத்திரத்தில் தாவா சொத்து சம்பந்தமாக ஏதேனும் வில்லங்கமோ, மாற்றமோ செய்ய வேண்டுமானால் நானும், 3 ம் பிரதிவாதியும் சேர்ந்து செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அதன்பிறகு 3 ம் பிரதிவாதிக்கு தெரியாமால் அவருக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட்பத்திரத்தை கடந்த 15.04.2008 ம் தேதி ரத்து செய்துவிட்டேன் என்றால் சரிதான். நான் 3 ம் பிரதிவாதிக்கு தெரியாமல் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

2) அதன்பிறகு கடந்த 26.05.2010 ம் தேதி தாவா சொத்தை மாரீஸ்வரி என்பவருக்கு கிரையமாக எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். மாரீஸ்வரிக்கு கிரையம் கொடுத்த பிறகு கடந்த 04.06.2010 ம் தேதி தாவா சொத்திற்கு எனது பெயரில் பவர் பத்திரம் எழுதி வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் மாரீஸ்வரி 3 ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு எண்.59/2012 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு விபரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்தை வாதிக்கு பவர் பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் கொடுத்திருக்கிறேன் என்றால் கிரையம் கொடுத்தது

உண்மை தான், வழக்கு பற்றி எதுவும் தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண்.59/2012 நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) வாதிக்கு கிரையம் கொடுக்கும்போது தாவா சொத்தின் அசல் கிரைய ஆவணத்தை அவரிடம் கொடுக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 2, 3 பிரதிவாதிகளின் மேல் எனக்கு இருந்த கோபத்தினால் தான் எந்த மறுபயனும் இல்லாமல் வாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். நானும், வாதியும் சேர்ந்துகொண்டு வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 16.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.07.16 15:28:03 +0530

District Munsif,
Aundipatti.